முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் குலச்சிறை நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

02.12.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **குமரகிரி கண்ட குருராசா**
**குருநாதராக வந்த தவராசா**
**அமரத்துவமிக்க ஆறுமுக அரங்கனே**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேள் திங்கள்**
**தெரியவே மூவையோர் திகதி கதிர்வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 16ம் நாள் 02.12.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு குலச்சிறை நாயனார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் காட்டும்
ஞான வழிக் கொள்கைகள்தனை
ஞாலமதில் உலக மக்கள் ஏற்று
4. ஏற்றுமே தருமமுடன் பூசைகளை
யாவரும் கலந்து சேவை ஆற்ற
உற்றதொரு தன்னார்வ தொண்டதனை
உலகமெங்கும் பரப்பி மக்கள்
5. மக்களெல்லாம் ஆறுமுகன் வழிபாட்டை
மண்ணுலகில் செய்து வருதலுற
ஆக்கமுடன் உலகமே பாதுகாப்பும்
ஆறுமுகன் தயவுபட வளமும் காண்கும்
6. காண்கவே தருமபலம் பெருக்கிட
கலியுகமே எல்லா சிக்கலும் விலகி
ஆன்மீக ஞானபூமியாக வரும்
அரங்கன் சீடர்கள் மூலமாக
7. ஆகவே மக்களுக்கு விழிப்புணர்வும்
ஆன்மீக அரசியல் ஆளுமையும்
யுகமாற்றமும் இனிதே நடந்தேறும்
உலகமே வியக்க அரங்கமகான்
8. மகானின் சமதர்ம சுத்தசைவ
மரணம் வெல்லும் நெறி பரவிட
யுகத்தாரிடையே சாத்வீக குணம் பரவி
உலகமே சமாதான நிலை கண்டு
9. கண்டுமே யுத்தம் வழி அழிவும்
கலகம் மாச்சர்யம் குரோதமான
கண்டு வரும் அழிவுகள் யாவும் விலகி
கண்ணியம் பாதுகாப்புமிக்கநல்
10. மிக்கநல் ஞானயுகம் ஆகும்
மேலவர்கள் ஞானிகள் துணைபட
எக்காலமும் பாதுகாப்பும் எல்லா பலமும்
எங்கும் முருகப்பெருமான் ஆளுமை பெருகி

11. பெருகியே உலகம் எங்கும்
பேராசான் அரங்கன் தலைமையும்
ஆறுமுகன் ஆளும் ஞானயுகமாகும்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் குலச்சிறை நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

குமரகிரி எனும் அற்புத ஞானசபையை அமைத்திட்ட குருராசனே இவ்வுலகிற்கு உலகப்பேராசானாக குருராஜனாக வந்திட்ட தவராசனே பெருமைகளையும் மாறா புகழையும் உடைய மகா தவசியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 16ம் நாள் 02.12.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே குலச்சிறை நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் குலச்சிறை நாயனார்.

உயர்வான ஆறுமுக அரங்கன் கூறும் உயர் ஞான கொள்கைகளை உலக மக்கள் ஏற்று தர்மங்கள் செய்து தவங்கள் செய்து பூஜைகள் செய்து உலக நலனிற்காக தன்னலம்அற்ற வகையில் தொண்டுகளை செய்திட வேண்டும். தன்னார்வமாய் மக்கள் வந்து தன்னார்வ தொண்டினை செய்வதுடன் உலகமெங்கும் பரப்பி மக்களெல்லாம் அதை ஏற்று முருகப்பெருமானின் திருவடி பற்றி முருகப்பெருமான் வழிபாட்டினை செய்து வர, ஆக்கமும் ஊக்கமும் பெருகி உலகம் முழுதும் அருள் பாதுகாப்பை பெற்று முருகப்பெருமானின் தயவினால் அவர்கள் வாழ்வினிலே சகல வளங்களையும் பெற்று சிறப்பான வாழ்வினை வாழ்வார்கள்.

உலக மக்களெல்லாம் தருமங்களைச் செய்து செய்து, உலகின் தர்மபலத்தினை பெருக்கிட உலகமே ஆக்கமும் ஊக்கமும் பெற்று கலியுகத்தின் மாயைகள் அகன்று கலியுகத்தின் எல்லா சிக்கல்களும் விலகி இந்த உலகம் ஆன்மீக ஞானபூமியாக ஆகிடும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மூலமாக இந்த உலகம் கலியுகத்தின் சிக்கல்களில் இருந்து விலகி ஞானபூமியாக ஆகிடும்.

ஆதலினால் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர்கள் உலக மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்குவர். ஆன்மீக அரசியல் ஈடுபாடும் ஆளுமைத் திறமையும் வளர்ந்து ஆன்மீக அரசியல் கொண்ட ஆட்சியும் உலகில் உருவாகி யுகமாற்றமும் இனிதே நடந்தேறும். உலகமே வியக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனின் சமதர்ம சுத்த சைவநெறியாகிய மரணத்தையும் வெல்லும் வல்லமைமிக்க தூயநெறி பரவிட உலக மக்களிடையே சாத்வீக குணம் பரவி உலகம் முழுதும் சமாதானம் உண்டாகி அமைதியடையும்.

யுத்தங்களின் மூலமாக உண்டாகும், அழிவுகள் விலகிடும், கலகங்கள் உருவாகாது, பாகுபாடுகள் எல்லாம் விலகிடும், குரோதங்கள் எல்லாம் விலகி அதனால் உண்டாகும் அழிவுகள் யாவும் விலகி கண்ணியமும் பாதுகாப்பும்மிக்க நல்ல ஞானயுகமாக ஆகிடும்.

மேலோர்களான ஞானிகளின் துணைபட எக்காலமும் பாதுகாப்பும் சகல பலங்களும் உண்டாகி முருகப்பெருமானின் ஆட்சியும் உலகினில் அதிகமாகி உலகம் எங்கும் உலகப் பேராசான் தலைமையேற்க இவ்வுலகமே முருகப்பெருமான் ஆளும் ஞானயுகமாக ஆகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் குலச்சிறை நாயனார்.

–சுபம்–